*புதுச்சேரி அரசு*

*துணைநிலை ஆளுநர் செயலகம்*

**No. LGS/PRO/2025** **02 அக்டோபர் 2025**

**பத்திரிகை செய்தி**

மகாத்மா காந்தியடிகளின் பிறந்த நாள் விழா

புதுச்சேரி அரசு சார்பில் இன்று (02.10.2025) கொண்டாடப்பட்டது. கடற்கரை சாலை, காந்தி சதுக்கத்தில் உள்ள அன்னாரது திருவுருவ சிலைக்கு மாண்புமிகு துணைநிலை ஆளுநர் திரு K.கைலாஷ்நாதன் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். நிகழ்ச்சியில் சர்வ மத பிரார்த்தனை நடைபெற்றது. காந்திய கீர்த்தனைகள் இசைக்கப்பட்டன.

அதனைத் தொடர்ந்து, பெருந்தலைவர் காமராஜர் நினைவு நாளை ஒட்டி காமராசர் சதுக்கத்தில் உள்ள அன்னாரது திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.

பின்னர், மாண்புமிகு பாரதப் பிரதமர் திரு நரேந்திர மோடியின் பிறந்த நாளை ஒட்டி தலைமைச் செயலகம் எதிரில் கடற்கரை மணல் பரப்பில் உருவாக்கப்பட்ட மணல் சிற்பத்தை பார்வையிட்டார்.

நிகழ்ச்சிகளில், மாண்புமிகு முதலமைச்சர் திரு ந . ரங்கசாமி, மாண்புமிகு சட்டப்பேரவை தலைவர் திரு R. செல்வம், மாண்புமிகு பொதுப்பணி அமைச்சர் திரு K. லட்சுமி நாராயணன், மாண்புமிகு சட்டப்பேரவைத் துணைத் தலைவர் திரு P. ராஜவேலு, சட்டமன்ற உறுப்பினர்கள், மற்றும் செய்தித் துறைச் செயலாளர் திரு முகமது ஆசின் அபித் ஆகியோர் கலந்து கொண்டனர்.